

அருப்புக்கோட்டையில் 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் தலைப்பில் பிரத்யேக செயலியை தொடங்கி வைத்து, பயிற்சி பாசறை கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.ஆர்.ஆர்.ராமச்சந்திரன் பேசினார். உடன் முன்னாள் சேர்மன்கள் சுப்புராஜா, சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி ஆகியோர் இருந்தனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஒய்வு பெற்ற ஊழியர் முன்னேற்ற நலசங்கம் சார்பில் 650 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சங்கத்தின் மண்டல பொதுச் செயலாளர் ஆர்.வி.மாடசாமி தலைமையில் தொ.மு.ச.மண்டல பொதுச் செயலாளர் ராஜசெல்வம் முன்னிலையில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஓய்வு பெற்ற ஊழியர் மனைவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம், தொ.மு.ச.பேரவைத் தலைவர் நடராஜன், தொ.மு.ச.பேரவை பொருளாளர் சி.வள்ளுவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மண்ணைக் காக்க – மானம் காக்க – மொழியைக் காக்க!

# திருவண்ணாமலையில் "ஓரணியில் தமிழ்நாடு"மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

திருவண்ணாமலை. ஜூலை1-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண்ணைக் காக்க - மானத்தைக் காக்க - மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

நாளை (02.07.2025 புதன் கிழமை) மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை அருகில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண்ணைக் காக்க - மானத்தைக் காக்க - மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு கழக தணிக்கைகுழு உறுப்பினரும், சட்டப்பேரவை துணைத் தலைவருமான கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் செங்கம் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி எஸ்.அம்பேத்குமார், செய்யாறு ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி. அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை



தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர் செல்வம், டி.ஏ.தட்சிணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணி ரவி, மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் சிவ.ஜெயராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலிமணியன்,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம் சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

வடக்கு மாவட்டம் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், இ.எஸ்.டி.கார்த்திகேயன், ஏ.என்.சம்பத், என்.கே.ஏ.பாபு, அ.மணிகண்டன், மா.ஏழுமலை, தொ.ப.சீ.மதிவாணன், பி.செல்வ ராஜன், சாது.ஆனந்த், க.சீனுவாசன், ஜி.பி.அசோக், டாக்டர் மகேந்திரன், இ.மணிகண்டன், மாலினிவினோத் திவாகரன், ஐ.எஸ்.அமானுல்லா, ஆர்.ராம்ரவி, ப.க.மணிவண்ணன், அமர் (எ) இப்ராஹிம் ஷெரீப், அப்சல்பாஷா, கே.ஏ.புஷ்பராஜ், பி.எஸ்.சாந்தகுமார், இராணிவெங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், துரை.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், டி.ராதா, ப.இளங்கோவன், ஏ.சுந்தரேசன், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக் குழு உறுப்பினர்கள்

ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை மற்றும் மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், நகராட்சி தலைவர்கள் எச்.ஜலால் மற்றும் திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா.ஷெரீப் உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாநகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன் நன்றி கூறுகிறார். முன்னதாக மாவட்ட திமுக கலைக்குழு அம்பேத்கரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# பாளையங்கோட்டை தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு - கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

நெல்லை, ஜூலை 1-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட (BLA2) பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி நகர் மாதா மாளிகையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு,கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

"ஓரணியில் தமிழ்நாடு "என்ற முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி புதிய உறுப்பினர்கள் சேர்க்கை குறித்தும்,

பாக நிலை முகவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் 2026 தேர்தல் முன்னிட்டு கழகத்தினர் தீவிரவாக செயல்படுவது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

அதன் பின்னர் கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர், மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி எடுத்துரைத்து பேசியதாவது.

அன்பும் உரிமையும் அதிகம் இருக்கும் இடங்களில் தான் அதிகளவு சண்டை நடக்கும்.நம்மில் நடக்கும் சண்டைகள் எல்லாம் மறந்து அனைத்து மனமாச்சரியங்களையும் மறந்து தேர்தல் பணியை நாம் செய்ய வேண்டும்.தி.மு.க.வின் உடன்பிறப்புகளாக, உறவினர்களாக ஒன்றிணைந்து இந்த தேர்தலை நாம் சந்திக்க வேண்டும். அனைத்து தொகுதிகளையும் வென்றெடுத்து காட்டுவோம் என கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களிடம் உறுதி கொடுத்துள்ளேன்.அதனை நாம் சாத்தியமாக்க வேண்டும் எத்தனையோ தேர்தல்களை நாம் சந்தித்திருக்கிறோம். நமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கான தேர்தல் இது, என்பதை புரிந்து அனைவரும் ஒன்றிணைந்து களப் பணியாற்ற வேண்டும்.

அண்ணன் தளபதி அவர்கள் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முழக்கத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம் குறித்து காணொளியில் விளக்கினார்கள்.அதன்படி நமது பாக முகவர்கள் கிராமங்களாக இருந்தாலும் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று 10 நிமிடமாவது அவர்களுடன் உரையாட வேண்டும்.

கழக அரசின் திட்டங்களான புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டங்கள், மகளிர் உரிமைத் தொகை விடியல் பயணம்,காலை உணவு திட்டம் போன்றவைகள் மூலம் பயன்பெறாத குடும்பங்களே இருக்க முடியாது.எனவே இது குறித்து அவர்களிடம் எடுத்துரைத்து உறுப்பினராக சேர்க்க வேண்டும். நமது மொழியை ஒழித்து தமிழகத்தின் உரிமைகளை பறித்து விட வேண்டும்,வரலாற்றில் தமிழை மறைத்து விட வேண்டும் என நினைக்கும் ஆட்சியாக ஒன்றிய பா.ஜ.க. இருந்து வருகிறது. அதனை நாம் யாரும் மறந்து விடக்கூடாது. பா.ஜ.க. எப்படி இந்த தேர்தலை அணுகுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். எப்போதும் நாங்கள் இணைய மாட்டோம் என கூறிவிட்டு பிரிந்து கிடந்தவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து இந்த தேர்தலை பா.ஜ.க சந்திக்கிறது.தமிழகத்தில் இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என சொன்னவர்களை எல்லாம் ஒரே அணியில் திரட்டி பா.ஜ.க தேர்தலை சந்திக்கிறது. காரணம் தி.மு.க.வை பார்த்து எதிர்க்கட்சி கூட்டணி பயந்து விட்டது. நமது கட்சியின் கொள்கையின் தந்தையாக இருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா, பெரியார் அவர்களையும் ஒரு மேடையில் அசிங்கப்படுத்தி கொச்சைப்படுத்தி பேசி காணொளி காட்சியை வெளியிட்டுள்ளது. ஆனால் அதை எதிர்த்து கேட்க கூட திராணியும் தகுதியும் இல்லாதவர்கள் கட்சி நடத்தி வருகின்றனர்.மீண்டும் அண்ணன் தளபதி தலைமையில் கழக ஆட்சி அமைய முழு ஈடுபாட்டுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். உங்களுடன் இணைந்து நாங்களும் பணியாற்ற தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர்,கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பேசினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், கழக மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான், மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் தினேஷ், தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயகுமார் (பாளை) முத்துச்செல்வி (நெல்லை)மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜூ, முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீத்தாராமன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜா முகமது, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன், மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன், துணைச் செயலாளர்கள் சுரேஷ்,தர்மன், கிரிஜா குமார்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பேச்சிப்பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன், நடராஜன், ராஜேஸ்வரி கண்ணன், மாநகர துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம், பாலமுருகன் என்ற பிரபு, சுதா மூர்த்தி, மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன், டாக்டர் சங்கர், அண்டன் செல்லத்துரை, சையது முகைதீன், துபாய் சாகுல் ஹமீது, நமச்சிவாயம் என்ற கோபி, வழக்கறிஞர் சங்கர், மானூர் ஒன்றிய செயலாளர்கள் மேற்கு அன்பழகன்,கிழக்கு அருள்மணி, தெற்கு மாரியப்பன், பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி, அணி அமைப்பாளர்கள் காமினி தேவன், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், செல்வ சூடாமணி, அனிதா, சௌந்தரம் முத்துராஜ், தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, பொறியாளர் அணி சாய்பாபா, எல்.ஐ.சி. பேச்சிமுத்து, மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், மகேஸ்வரி, கதீஜா இக்லாம் பாசிலா, ரேவதி, மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி உலகநாதன், அலி சேக் மன்சூர்,

கழகப் பேச்சாளர்கள் நெல்லை ரவி,முத்தையா, ராவணன், மில் ஜே.குமார் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA 2) சார்பு அணி அமைப்பாளர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

### மயிலம் ஒன்றியம் ஆசூர் – வெங்கந்தூர் ஊராட்சிகளில்

# ரூ. 26.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

மைலம், ஜூலை 1-

மயிலம் ஒன்றியம் ஆசூர், வெங்கந்தூர் ஊராட்சிகளில் ரூபாய் 26.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ஆசூர், வெங்கந்தூர், ஆகிய ஊராட்சிகளில்புதிய நியாய விலை கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என கிராம ஊர் பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் ஆசூர்ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ்12 லட்சத்தி 70ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

வெங்கந்தூர்ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 13 லட்சத்தி 60 ஆயிரம்ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில்

ஊராட்சி மன்ற தலைவர்கள் சுசிலா முத்துசாமி, வசந்தா விநாயகம் ஆகிய முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு ஆசூர், வெங்கந்தூர் ஊராட்சிகளில் ரூபாய் 26.30லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை மக்கள் பயன்பாட்டிற்கு தெரிந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர் மணிமாறன், மாவட்ட கவுன்சிலர்மகேஸ்வரி குமரேசன்,ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜ் பரத், பரிதா சம்சுதீன்,சரசு முருகன், கோமதி பச்சையப்பன், உமா ஞானசேகரன்,ஒன்றிய நிர்வாகிகள் சேகர், ஞானசேகர், பாஸ்கர், முனியன், அன்பழகன், ராம்குமார், கலிவரதன், குமார், சுப்பிரமணி, கௌஸ் பாஷா, ஆசூர்பிரபு, அன்பு சேகர்,பெருமாள், சுப்ரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பில் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட தகவல் தொழில்நுட்ப அணியினர் மற்றும் பி.எல்.ஏ.2 வினருக்கான பயிற்சி ஆலோசனைக் கூட்டம் அணைக்கட்டு கலைஞர் அறிவாலயத்தில் ஒன்றிய தி.மு.க. செயலாளர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு தலைமையில் நடந்தது. பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பிரகாஷ், ஒன்றிய துணைச் செயலாளர் கணபதி, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் முருகானந்தம் பயிற்சி அளித்தார்.



விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ஆசூர், வெங்கந்தூர் ஊராட்சிகளில் ரூபாய் 26.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சிசிவா, ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் ,ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.